# மூலிகை வளர்ப்போம்

# வளம் பெறுவோம்



## 5. மாவிலங்கம்

**தாவரவியல் பெயர்** : Crateva adansonii Linn

**தாவர இனம்** : CAPPARACEAE

**பொது சிங்களப் பெயர்** : லுனுவரன

**சமஸ்கிருத பெயர்** : அஷ்மரீக்ன

**தமிழ் பெயர்** : மாவிலங்கம்

**ஆங்கிலப் பெயர்** : Three leaved Caper

**நடும் பகுதி** : வித்து / கிளைத் துண்டுகள் / வேரின் மூலம் உருவான கன்றுகள்

**மருந்துக்காகப் பயன்படும் பகுதி** : வேர்
தண்டின் பட்டை
கொழுந்து இலை
பூ
பூரணமான தாவரம்

**அறிமுகம்**

மாவிலங்கம் வரல்நில வலயக் காலநிலையில் மிக இலகுவாக நடக்கூடிய ஆயர்வேத மற்றும் உள்நாட்டு மருத்துவ முறையின் அதி சிறந்த ஒரு வலி எதிர்ப்புப் பொருளாகும். இதற்கு மேலதிகமாக இது உடைவு, முறிவுகளுக்கான வைத்தியத்தின் போது வலிகளைக் குறைக்கும் பத்துக்களைச் செய்யும் போது அதிகமாக பாவிக்கப்படுகின்றது.

**தாவரவியல் விபரம்.**

நன்றாக வளர்த்தியடைந்த சாம்பல் நிறமுடைய வெளிப் புற பட்டையைக் கொண்ட சிறிய மரமாகும் இலைகள் தொடர்ச்சியானவை மூவிலை கொண்டவை இலைக்காம்புகள் குட்டையானவை. இலைகள் 6-10 செ.மீ அகலம் கொண்டவை இலைக்காம்பு மெல்லியது பூக்கள் இருபாலுடையவை, பெரியவை பச்சைநிறம் கலந்த வெள்ளை நிறமுடையவை பூக்கள் உருவாவது புதிய இலைகள் உருவாகும் போதாகும். உருண்டை வடிவமுடைய காய்கள் காணப்படும் அவற்றின் தோல் தடிப்பானவை, விதைகள் சிலவற்றை மாத்திரம் கொண்டவை. பூ டிசம்பர் மாதத்திலேயே பூக்கும்.

**விவசாயவியல் விபரம்**

வித்து வேர் ஆகியவற்றின் மூலம் உருவாகும் கன்றுகள் மூலம் அல்லது கிளைகள் மூலம் கன்றுகளை உருவாக்கலாம். நன்றாகப் பழுத்த மாவிலங்க காய்களின் தோலுடனான சதைப்பகுதியை நீரினால் கழுவி வடவும் பின் 48 மணி நேரம் நீரில் ஊரவைத்து அதன் பின் மணல் மேடையில் தவான் பண்ணவும்.30 - 45 நாட்களில் வித்துக்கள் முளைத்து கன்றுகளைப் பெறலாம். முளைத்த விதைகள் 10 செ.மீ உயரமுள்ள கன்றுகளான பின் பாத்திரங்களுக்கு மாற்றவும். 60 செ.மீ வரை அவற்றை வளரவிடுங்கள் பின்னர் 30x30x30 செ.மீ அளவில் குழிகள் 3x3 மீட்டர் இடைவெளி கொண்டதாக வெட்டி அதில் கொம்போஸ்ட் உரமும் மண்ணையும் கலந்த கலவையைக் கொண்டு நிரப்பி ஒக்டோபரிலிருந்து டிசம்பர் வரையான மழை காலத்தில் நடவும்.

**விளைச்சளை அறுவடை செய்தலும் அதை களஞ்சியப்படுத்தலும்.**

இலை, பட்டைகள் விளைச்சலாகப் பெற்றுக்கொள்ளப்படும். பட்டையை விளைச்சலாகப் பெறுவதற்கு கன்றுகளை நட்டு 15 வருடகாலமாவது செல்ல வேண்டும். பட்டையை அறுவடையாகப் பெறும் போது இடைக்கிடையே வெவ்வேறு பக்கங்களினால் அறுவடை செய்வது , முதிர்ந்த கிளைகளில் உள்ள பட்டைகளை அறுவடை செய்வதின் மூலம் நீண்ட நாட்களுக்கு சிறப்பான ஒரு அறுவடையைப் பெறலாம். பெறப்பட்ட பட்டைகளை காற்றில் அல்லது சிறிய சூட்டைக் கொண்டு ஒரு அடுப்பின் மூலம் காயவைத்து ஒரு உலர்ந்த இடத்தில் களஞ்சியப்படுத்தல்

**நிகழ்காலப் பாவணையும் சந்தைநிலையும்**

ஆயர்வேத, உள்நாட்டு மருந்துத்தயாரிப்பில் பச்சை, காய்ந்த இரு வகையிலும் பயன்படுத்தப்படும் ஒரு மூலப் பொருளாக பயன்படும் மாவிலங்கம் அண்ணளவாக 15,000 Kg எமது நாட்டில் பயன்படுத்தப்படுகின்றது. நிகழ்கால சந்தை விலை அடிப்படையில் மாவிலங்கம் 1 Kg அண்ணளவாக ரூ.300,00 ஆகும்.

**தொகுத்தவர்:**

வைத்தியர் லக்ஷான் குணசிங்க
ஆயுர்வேத சமூக வைத்திய அதிகாரி.
கங்க வட கோரலய

**தமிழாக்கம்:**

வைத்தியர் எம்.எஸ்.எஸ். ஸஜீஹா
ஆயுர்வேத சமூக வைத்திய அதிகாரி.
பாததும்பர.